# இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கங்கள் : இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்ட ஆய்வு

**பாதிமா ஷமீரா அப்துல் வாஹிட்[1]ரூபாதிமா நாதிரா அப்துல் குத்தூஸ்[2]**
[1]Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka
[2]Faculty of Islamic studies & Arabic, South Eastern University of Sri Lanka
*shameerawahid77@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**: ''ஒரு கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவியை ஊடகம்'' என வறையரை செய்யலாம். சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்நிலையில் உள்ளனர். 15-30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இன்று சமூக ஊடகங்களில் தங்கி வாழ்கின்றனர் என்று கூறலாம். அவ்வகையில் இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டது. சமூக ஊடகங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை இவ்வாய்வின் பிரச்சினையாகும். இளைஞர்கள் மத்தியில் அதிகமாக பயன்படுத்தப்படும்சமூக ஊடகங்களைக் கண்டறிதல், அவர்களின் சமூக ஊடகங்கள் நோக்கியதான அனுகுமுறையை மதிப்பிடல்,இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் தாக்கங்களை இனங்காணல், இளைஞர்கள் சமூக ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான ஆலோசணைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல் என்பனவே இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ்வாய்வுக்காக அளவியல் மற்றும் பண்புத்தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைப் பண்புத்தரவுகளாக நேர்காணல(25), அவதானம், குழுக்கலந்துரையாடல்கள(04) மூலமும், அளவியல் தரவுகளாக வினாக்கொத்துக்கள்(30) மூலமும் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு முதலாம் நிலை தரவுகள் கணனி மூலம் குறிப்பாக நஒஉநட ்யஉமயபந மூலம் எளிய புள்ளிவிபர முறையினூடே பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெறப்பட்ட தரவுகளின் பெறுபேறாக பல்கலைக்கழக மாணவர்களது நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவிணை அதிகரித்தல், உதவிப்பறிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்களையும், உடல் உள ரீதியான பாதிப்பு, நேர வீண்விரயம், கல்வியில் பின்னடைவு, அதிக செலவு, சமூக கலாச்சார விழுமியஙகளில் சீரழிவு போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணஙகாணப்பட்டன. சமூக ஊடகங்கள் இன்றைய இளைஞர்கள் மத்தியில் தவிர்க்க முடியாத அடிப்படை தேவைகளுள் ஒன்றாக மாறிவிட்டதெனலாம். இச்சமூக ஊடகங்கள் அதன் தாக்கம், விளைவு தொடர்பாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும். இதன் பாதிப்புக்ககளை உளவியலாளர்கள் சமூகத்திற்கு எத்திவைக்க வேண்டும். பல்கழைக்கழக நிர்வாகம் கல்வித்தேவைக்காக அமைத்துக் கொடுத்த வலைதள உதவிகளை கண்காணித்தல் போன்றன ஆய்வின் முடிவில் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**திறவுச் சொற்கள்**: இளைஞர்கள், சமூக ஊடகம், தாக்கம் பல்கழைக்கழகம்

## அறிமுகம்

''16ம் நூற்றாண்டில் கடற்படை யார் கையில் இருந்ததோ அவர்களுக்குத் தான் இந்த உலகம் சொந்தமானது. 19ம் நூற்றாண்டில் விமானப்படை யார் கையில் இருந்ததோ அவர்களுக்குத் தான் இந்த உலகம் சொந்தமானது. 20ம் நூற்றாண்டில் உலக ஊடகங்களை எவர் தனக்கு கட்டுப்படுத்திக் கொள்கிறாரோ உலக நாடுகள் எல்லாம் அவருக்குச் சொந்தமாகி விடும்.'' என்கிறார் இந்திய முன்னாள் பிரதமர் மகாதீர். இத்தகைய சக்திவாய்ந்த ஊடகங்கள் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை எம்மால் காண முடியும். ஆரம்ப காலங்களில் மனிதன் தன் கருத்துக்களையும், தகவல்களையும் பிறரிடம் பரிமாற்றிக் கொள்ள வாய்மொழி ஊடகங்களைப் பயன்படுத்தினான். பிற்பட்ட காலங்களில் தகவல்களைப் பரிமாற்றுவதில் அச்சு மற்றும் எழுத்து ஊடகங்கள் தன்னிகரில்லாப் பங்களிப்பை வழங்கின. 1477ல் அச்சு மற்றும் எழுத்து ஊடகங்களை உலகுக்கு வழங்கி ஊடகத் துரையை வளர்த்த பெருமை ஜெர்மனைச் சேர்ந்த ஜோஹானஸ் கூட்டன் பேரக்கையே சாரும். அச்சு ஊடகத்தின் அடுத்தபடி அலை ஊடகம் வளர்ச்சி பெறத் தொடங்கியது.

தகவல்களைப் பரிமாற்ற புறாவையும், விலங்கையும் தூதனுப்பிய மனிதன் இன்று காற்றிலும் தூதனுப்புகிறான். 1894ல் இத்தாலி நாட்டு மார்கோனி கம்பியில்லாத் தந்தி முறையைக் கண்டறிய பிற்படியாய் 1973ல் ஏப்ரில் 3ம் திகதி அமெரிக்க நாட்டின் கூப்பர் கைபேசியை உலகிற்கு அறிமுகம் செய்தார். பின்னர் படிப்படியாய் காட்சி ஊடகம் அறிமுகமாகி மின்னனு ஊடகமாக வளர்ச்சி கண்டது. தகவல் தொழிநுட்பத்தின் துரிதமான முன்னேற்றமும் இணையத்தளங்களின் ஆக்கிரமிப்பும் இன்று சமூக ஊடகங்கள் என்று பல தகவல் பரிமாற்ற

எல்லைகளாக விரிவுபடுத்தப்பட்டு உலகின் மூலை முடுக்கெங்கும் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் கணப்பொழுதில் பகிர்ந்து அறிந்து கொள்ளும் போக்கு மிக வேகமாக வளர்ந்து கொண்டே வருகிறது. இவ்வாறான சமூக ஊடகங்கள் பல சிறப்பம்சங்களையும், பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது தொடர்பாடல்,தகவல் பரிமாற்றம்,படம் பகிர்வு(image), ஒலிப்பதிவு(audio), காணொழி(video), போன்றவற்றைப் பதிவிடல், வெளியிடல் போன்ற இன்னோரன்ன அம்சங்களைத் தன்னுள் அடக்குகிறது. இத்தகைய சமூக ஊடகங்கின் தொழிநுட்பம் சார்ந்த வளர்ச்சியும் சிந்தனை, கருத்துரிமை போன்றனவற்றின் வளர்ச்சியும் பல்வேறுபட்ட சாதக பாதகங்களையும் விமர்சனங்களையும் எதிர்நோக்குகின்றது. சமூக ஊடகங்கள் ஒருவருடைய கருத்தை அவரது பார்வையில் விரும்பியவாறு பதவு செய்வதில் முன்னிலையில் உள்ளது. ஏந்தவொரு விடயம் நடந்தாலும் அதற்கு ஒரு பாராட்டு, இகழ்ச்சி, வர்ணிப்பு போனறவற்றைப் பதிவிடுவதில் நேரடி ஒலிபரப்பு ஊடகங்களை விடவும் சமூக ஊடகங்கள் முன்னணியில் உள்ளது என்றே கூறலாம். ''சமூக ஊடகம் என்பது இணையத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாகும். அது கருத்தியல் மற்றும் தொழிநுட்பவியலை கட்டியமைக்கும் ஊடகமாகவும் செயற்படுகிறது.(chukwuebuka 2013). இன்று இளைஞர்களில் அதிகமானோர் மின்னனு ஊடகங்களைப் பயன்படுத்தி சமூக ஊடகங்கள் பக்கம் நகர்வதை அதிகமாக காணலாம். இவர்களது அதிகரித்தநகர்வுகாரணமாக சமூக ஊடகங்கள் இளைஞர்கள் மீது அதிகமாக செல்வாக்கு செலுத்துகின்றது. இளைஞர்கள் மத்தியிலான சமூக ஊடகங்களின் அதிகரித்த பாவனை அவர்களை அதிகம் பாதித்துள்ளது எனக் கூறலாம். இவ்வாறு சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துவதால் ஏற்படும் தாக்கங்கள் என்ன? என்ற கேள்வி எல்லோரது மனதிலும் எழக் கூடிய கேள்வியாகும். மேலும் சமூக ஊடகங்கள் மனித வாழ்க்கையைப் பாதிக்கும் ஒரு விடயமாகவும் காணப்படுகின்றது. அத்தோடு சமூக ஊடகங்களின் தாக்கங்களை உணராத பிரதேசமோ நாடுகளோ உலகில் எஙகும் இல்லை என்றே கூறலாம். அதிலும் குறிப்பாக சமூக ஊடக பயன்பாடுகளால் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அவ்வகையில் இவ்வாய்வும் இளைஞர்களது வாழ்க்கைப் போக்கு,வாழ்க்கை முறை, கல்வி, கலாச்சார, உடல், உள சமூக செயற்பாடுகள் போன்றவற்றில் சமூக ஊடகங்கள் எவ்வாறான தாக்கங்களை செலுத்துகின்றன என்பதை இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக வைத்து ஆராயப்பட்டது.

இணையத்தின் உபயோகம் சமூகத்தில் பல்வேறு தாக்கங்களை செலுத்தும் அதேவேளை பல்வேறுபட்ட புதிய சேவைகளையும் நாள்தோறும் அறிமுகப்படுத்தி வருகிறது. அவ்வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய எண்ணக்கருவாக சமூக வலைப்பின்னல் நோக்கப்படுகிறது. இன்றைய சமூக வலைப்பின்னல் தளங்களாக facebook, twitter,linkdin, google+,whatapp, viber, instagram, flicker,line போன்றவற்றைக் கூறலாம்.சமூக ஊடகங்கள் பல புரட்சிகளுக்கு கூட வழிவகுத்திருந்தமையை பிற்பட்ட காலங்களில் காணக் கூடியதாக இருந்தது. எகிப்திய நாட்டின் புரட்சியும், எழுச்சியும், அமெரிக்க தேர்தல் பிரச்சாரம், இலங்கை ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றை உதாரணமாக கூறலாம். எனவேசமூக ஊடகங்கள் அல்லது சமூக வலைதளங்கள் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நன்மை, தீமை என இரு பக்கங்களைக் கொண்டது. எது எவ்வாறாக இருப்பினும் சமூக ஊடகங்கள் அதிகமான சாதகங்களைக் கொண்டிருந்த போதிலும் இளைஞர்கள் மத்தியில் அதன் பயன்பாடுகளை நோக்கும் போது தவறான பல வழிகளில பயன்படுத்துவதைக் காணலாம்.''பாலில் கலந்திருக்கும் நீரை விடுத்து பாலை அருந்தும் அன்னம் போல'' சமூக ஊடகங்களின் தீமைகளை விடுத்து நன்மைகளை மட்டும் பயன்படுத்தும் விதத்தில் இளைஞர் சமூகத்தை விழிப்புணர்வூட்ட வேண்டும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பல்கலைக்கழக இளைஞர்கள் சமூக ஊடகங்களை அதிகம் பயன்படுத்தக் கூடியவர்களாகவும், அவர்களுக்காக வழங்கப்பட்ட இணையத்தள வசதிகளை கல்வி நடவடிக்கைகளுக்காக மாத்திரமின்றி,சமூக வலைதளங்கள் நோக்கி அதீர்த கவனத்தை திருப்புகின்றனர். இவ்வாறான சமூக ஊடகங்களை அதிகம் விரும்புவதாலும், பயன்படுத்துவதாலும் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட உடல், உள, சமூக, கலாச்சார, கல்வி ரீதியிலான தாக்கங்களை இனங்காண்பதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

சமூக ஊடகங்கள் இளைஞர்களது வாழ்க்கை முறையை சிறப்பாக அமைத்துக்கொள்ள ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய ஒரு சிறந்த மூலமாகக் காணப்படுகிறது. மேலும் துரிதமாக உடனுக்குடன் தகவல்களை வழங்குவதோடு கருத்துச் சுதந்திரம் மிக்க ஒருஊடகமாகவும் திகழ்வதோடு இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு சாதனமாகவும் உள்ளது. மேலும் சமூக ஊடகங்களை இளைஞர்களுக்கான கல்வி வழங்கும் ஒரு ஊடகமாக மாற்றியமைத்துக் கொள்ளல் மற்றும் சரியான வழியில்சமூக ஊடகங்களைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கல், விழிப்புணர்வூட்டல் என்பன கருதுகோள்களாக கொள்ளப்பட்டன.

**ஆய்வு முறையியல்**

ஆய்வொன்றினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு ஆய்வு முறையியல் மற்றும் தரவு சேகரிப்பு முறை என்பன முக்கியமான ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. இங்கு ஆய்வு முறையிலில் இவ்வாய்வுக்காக அளவியல் மற்றும் பண்புத்தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைப் பண்புத்தரவுகளாக நேர்காணல்(25), நேரடி அவதானம், குழுக்கலந்துரையாடல்கள்(04) மூலமும் அளவியல் தரவுகளாக வினாக்கொத்துக்கள்(30) ஐக் கொண்டமாதிரியைப் பயன்படுத்திதரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

ஆத்தோடு முதலாம் நிலை தரவுகள் கணனி மூலம் குறிப்பாக excel package மூலம் எளிய புள்ளிவிபர முறையினூடே பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**தரவும், தரவுப் பகுப்பாய்வும்**


இவ்வாறுமுதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளுடே பெறப்பட்ட தரவுகளுக்கமைய பல்கலைக்கழக இளைஞர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில் உள்ள விருப்பம், அவர்களில் சமூக ஊடகங்களின் தாக்கம், சமூக ஊடகங்களைஅனுகும் முறை,சமூக ஊடகங்களை அனுகுவதற்கான காரணங்கள், கல்வியில் சமூக ஊடகங்களின் பயன்பாடு என்பன பற்றிய முழுமையான தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள்,நேர்காணல், அவதானம், குழுக்கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. 263 பேரை மையமாகக் கொண்ட இவ்வாய்வுக்கு 30 பேரைக் கொண்ட ஒரு மாதிரி மூலம் அனுமானப் புள்ளிவிபரவியல் முறையில் தரவுகள் புகுப்பாயப்பட்டன. இத்தரவுகள் அவர்களின் சொந்த பயன்பாட்டு அடிப்படையில் பெறப்பட்டவையாகும். எனவே விகிதாசார முறையில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வின் இறுதியில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வின் நோக்கங்களாக பின்வருவன கொள்ளப்பட்டன.

1. **பல்கலைக்கழக இளைஞர்கள் அதிகமாக பயன்படுத்தும் சமூக ஊடகங்களை அடையாளம் காணல்**

இன்று சமூக ஊடகங்கள் 15-30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மத்தியில் அதிகமாக ஊடுருவக் கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. அவ்வகையில் இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்டதாகும். இவ்வாய்வில் இளைஞர்கள் அதிகமாக விரும்பி பயன்படுத்தும் சமூக ஊடகங்களாக facebook, whatsapp, twitter, skype, youtubeபோன்றசமூக ஊடகங்கள் வினாக்கொத்தில் கையளிக்கப்பட்டன.அதன் மூலம் பெறப்பட்ட முடிவுகளை பகுப்பாய்வு செய்ததமைக்கமையவினாக்கொத்தில் வழங்கப்பட்டfacebook, whatsapp, twitter, skype, youtubeபோன்ற அனைத்துசமூக ஊடகங்களையும் பயன்படுத்தக் கூடியவர்களும், ஓரிரண்டுசமூக ஊடகங்களைப் பயன்கடுத்தக் கூடியவர்களும் காணப்பட்டனர்.இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களுள் 72% மானமாணவர்கள்அதிகம் விரும்பி பயன்படுத்தக் கூடிய சமூக ஊடகமாக whatsappகாணப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் 63% மானமாணவர்கள் youtube ஐபயன்படுத்தக் கூடியவர்களாகவும், 52%மானமாணவர்கள் facebook ஐஅதிகம் விரும்பி பயன்படுத்தக் கூடியவர்களாகவும் நான்காம் இடத்தில் 45% துடன் twitter உம்ஐந்தாம் இடத்தில் 30% மானமாணவர்களால் பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்கமாக skypeஉம் அடையாளம் காணப்பட்டன.




*வரைபடம்1. பல்கலைக்கழகமாணவர்களிடையே அதிகம் விரும்பி பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்கள்*


உலக அரங்கில் சமூக ஊடகங்கள் பயன்பாட்டில் முதலிடத்தில் facebook உம், அதனைத் தொடர்ந்து google+உம் காணப்படும் அதேவேளை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்கள் மத்தியில் whatsappஅதிகம் விரும்பி பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் பற்றி கலந்துரையாடப்பட்ட போது பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன. அதாவது facebook ஐ விடwhatsappபாதுகாப்பானதாக உள்ளதாகவும் facebookகில்ஒரு விடயம் பகிரப்படும் பட்சத்தில் அது அதனைப் பயன்படுத்தும் அனைவரையும் சென்றடைவதாகவும்,whatsappஇல்பகிரப்படும்விடயம் தான்

அனுப்புபவரை மட்டுமே சென்றடைவதாகவும் கூறியதோடு பெண் மாணவியர்களுக்கு whatsappஆனது facebookஐ விட பாதுகாப்பான சிறந்த ஊடகம் எனவும் கூறினர்.மேலும்whatsappஇல் தற்போது pdf மற்றும் prasantation களை பெற அல்லது பகிரக் கூடிய வசதி உள்ளது எனவும் கூறினர்.

மேலும் இரண்டாம் நிலையில் youtube ஐபயன்படுத்தக் கூடியமைக்கானகாரணங்கள் பற்றி கலந்துரையாடப்பட்ட போது youtube இல் தமக்கு தேவையான இனைத்து videoக்களையும் கல்வி சார்ந்த,கல்வி சாராத ஏனைய திரைப்படங்கள் மற்றும் தொடர் தொலைக்காட்சி நாடகங்களை அதிகமாகப் பார்ப்பதாகவும் கூறினர். மேலும் youtube இனைப் பொறுத்தவரை அது தன்னுள் இன்றுவரை பதிவுசெய்யப்பட்ட அனைத்து videoக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.இதனால் எந்தவொரு videoவையும் எந்நேரத்திலும், எங்கிருந்தும் பெறக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதால் இதனை விரும்பிப் பயன்படுத்துவதாகவும் கூறினர். மேலும் skypeஐ விரும்பி பயன்படுத்துவோரின் தொகை குறைகாக இருப்பதற்கான காரணங்கள் கேட்கப்பட்டதற்கு இன்று அதிகமானோர்whatsappஐவிரும்பி பயன்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர். தற்போது whatsappஇல் video callவசதிகாணப்படுவதால் skypeஐ பயன்படுத்த வேண்டிய தேவை இருப்பதில்லை எனவும் skypeஇலே உள்ள chatting, image sharing,video and audio call என அனைத்து வசதிகளும் whatsappஇல் காணப்படுவதால் இன்னொரு appஇனை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் போது குறித்த தொலைபேசியாயின் அதன் கொள்ளளவுஅதிகரிக்கும்.எனவே whatsappஇனைப் பயன்படுத்துவது சிறந்ததாகவும் கலந்துரையாடலின் போது கூறினர். இவ்வாறாக பல்கலைக்கழக மாணவர்களிடையே அதிகம் விரும்பி பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்கள் இனங்காணப்பட்டன.

**02. பல்கலைக்கழக இளைஞர்களின் சமூக ஊடகங்களை நோக்கியதான அனுகுமுறையை அறிதல்.**

பல்கலைக்கழக இளைஞர்களின் சமூக ஊடகங்களை நோக்கியதான அனுகுமுறையானது பின்வருமாறு காணப்பபட்டது.




*வரைபடம்2.* பல்கலைக்கழக*மாணவர்களின் சமூக ஊடகங்கள் நோக்கியதான அனுகுமுறை*

மாதிரிகள் மூலம் பெறப்பட்ட தரவகளின் முடிவுகளுக்கமைய அதிகமானோர் கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு பல்கலைக்கழகம் இலவசமாக அமைத்துக் கொடுத்த wifiவசதிகளை அதிகம்பயன்படுத்தி உள்ளனர் என்பதைக் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக வாசிகசாலையில் வழங்கப்பட்டுள்ளwifiஐ அதிகம் பயன்படுத்தி உள்ளதைக்காணலாம். மேலும்பல்கலைக்கழக கணனி கூடங்களில்விரிவுரை மற்றும் விரிவுரை அல்லாத நேரங்களில்சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி உள்ளதை வரைபின் மூலம் காணக் கூடியதாக உள்ளது. மேலும் பீடத்துக்கென பிரத்தியேகமாக வழங்கப்பட்ட wifiஐயும்பயன்படுத்தியுள்ளனர். அத்தோடு தம் சொந்த தொலைபேசிகளையம் பயன்படுத்துவதைக் காணலாம். எனவே இவ்வாய்வின் முடிவில் பல்கலைக்கழக இளைஞர்கள் கல்விக்காக செலவு செய்யும் நேரத்தை விட சமூக ஊடகங்களைபயன்படுத்துவதில் அதிக நேரத்தை செலவிடுவதுகண்டறியப்பட்டது.

**03. பல்கலைக்கழக இளைஞர்கள் சமூக ஊடகங்களைப்பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.**

மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாக பின்வருவன கண்டறியப்பட்டன. கல்வித்தேவை, பொழுதுபோக்கு, இணைய பாவணை, தொடர்பாடல், இணையத்தில் அரட்டை, இலகுவில் குறுந்தகவல் (sms), மற்றும் மின்னஞ்சல் ( e-mail) அனுப்பவும், பெறவும் முடிதல், குறைந்த செலவில்

அதிக பயன் பெற முடிதல், புகைப்படங்களை அனுப்புதல்,பிறரிடமிருந்து கருத்துக்களைப்(comments) பெறுதல் (watsapp, facebook, skype),audio,video call வசதி (watsapp, skype) , சுகாதார சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற முடிகின்றமை, தனிமையில் இருக்கும் போது நேரத்தை போக்குவதற்காகவும், அவசர தேவைகளின் போது தொடர்பு கொள்வதற்காகவும், தூரத்திலுள்ள நண்பர்களுடன் உறவாடல், திரைப்படம், பாடல்கள், தொடர்கதைகள் போன்றவற்றை பார்ப்பதற்கும், பயன்படுத்துவதோடு சமூக ஊடகங்களில் வலம் வருவது சுய கௌரவமாக நினைப்பதனாலும், நாட்டின் மற்றும் உலகின் மூலை முடுக்குகளெங்கும் நடைபெறும் விடயங்களை தன் கைக்குள்ளிருந்தே உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், பிறருக்கு அறிவிக்கவும் முடியும் என்பதாலும் ஒரே நேரத்தில் ஒரே விடயத்தை பலருக்கு அனுப்பவும் பதில்களைப் பெறவும் முடியும். போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாக கண்டறியப்பட்டன.

**04. பல்கலைக்கழக இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் நேர், மறைத் தாக்கங்களை கண்டறிதல்**

சமூக ஊடகங்கள் அல்லது சமூக வலைதளங்கள் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நன்மை, தீமை என இரு பக்கங்களைக் கொண்டது. சமூக ஊடகங்களின் தோற்றம் சிறந்ததாக இருப்பினும் அதனுள் பலநேர், மறைத் தாக்கங்கள் காணப்படுவதை யாராலும் மறுக்கமுடியாது. அந்தவகையில் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதால் பல்கலைக்கழக இளைஞர்களிடையேயும் பல நேர், மறைத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதை இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டது. சமூக ஊடகங்களின் பாவனையால் ஏற்பட்ட நேரான தாக்கங்களாக பல்கலைக்கழக மாணவர்களது நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவினை அதிகரித்தல், உதவிப்பறிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல்,போன்ற நேரான தாக்கங்களையும்,சிறந்த ஆழுமையை விருத்திசெய்யக் கூடிய பொழுதுபோக்குகள் இன்மை, உடல் உள சோர்வு மற்றும் உடல் உள ரீதியான பாதிப்பு,மன ரீதியில் பாதிக்கப்படல், இணையப் பாவனையால் புத்தக தேடுதல் குறைவு, கைத்தொலைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையாதல், துர்நடத்தை, பண, நேர வீண்விரயம், சரியான நேரத்துக்கு தூக்கமின்மை, சரியான நேரத்துக்கு உணவினை உட்கொள்ளாததால் உடல் நலம் குன்றுதல்,அதிக நேரம் தொடர்ந்து தொலைபேசி அல்லது கணனிளைப் பார்ப்பதால் தலைவலி, கண்நோவு, ஓரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்திருப்பதால் இடுப்புவலி, முதுகு வலி என்பவற்றூடு தூகக்கமின்மை போன்ற இன்னும் பல நோய்களும் ஏற்படுகின்றன. குடும்ப உறவினர்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்தல்,ஆபாச படங்களைப் பார்த்தல், அறிமுகமற்றோருடனான தொடர்பு அதிகரிப்பதோடு அறிமுகமானவர்களுக்கிடையிலான தொடர்பு அருகுதல், அன்னியக் கலாச்சாரத் தாக்கம் ஊடுறுவல், கல்வியைப் பூரணப்படுத்துவதில் சிரமம், சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாமல் போவதால் பெற்றோரைக் ஒழுங்காக கவணிக்க முடியாது மற்றோரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்படல், இதனால் மது, போதை, களவு, கொலை, கொள்ளை போன்ற வன்முறைகளில் ஈடுபடல்.கல்வியில் பின்னடைவு, அதிக செலவு, சமூக கலாச்சார விழுமியஙகளில் சீரழிவு, ஆண் பெண் தொடர்பு அதிகரித்தல் போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணங்காணப்பட்டன.

**04. பல்கலைக்கழக இளைஞர்கள் சமூக ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான அனுகுமுறைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல்**

இவ்வாய்வின் முடிவில் சமூக ஊடகங்களின் பயன்பாடு காலத்தின் தேவையாக இருப்பதோடு,பல்கலைக்கழக இளைஞர்களின் எதிர்காலத்தை முன்னிறுத்தி,பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.
பல்கலைக்கழக இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பல்கலைக்கழக மற்றும் ஏனைய சமூக நலன்புரி நிறுவனங்களுடாக நடத்தப்படல் வேண்டும். அவ்வாறான தாக்கங்களை அவர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக வலைகளங்களைப் பயன்படுத்தியே காட்சி ஒலிப்படங்கள் மூலமாக எடுத்துக்காட்டல வேண்டும். ஏனெனில் கண்டிப்பதனாலோ, தண்டிப்பதனாலோ பிழைகளைத் திருத்த முடியாது. மேலும் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் விடயத்தில் அதிக கரிசணை காட்ட வேண்டும். அவர்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக ஊடகங்கள், அவர்களது நடத்தை, கல்வி பின்னடைவுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை திருத்துவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும். உளவியலாளர்கள் சமூக ஊடகங்களின் உடல் உள மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் பற்றி ஆலோசனைகளை வழங்க வேண்டும். மேலும் பல்கலைக்கழக நிறவனங்களும் இது தொடர்பில் கரிசனை காட்டி விரிவுரை நேரங்களில் மற்றும் கணனி கூடங்களில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டினைத் தவிர்க்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் அத்தோடு தேவையற்ற கல்விக்கு தடையளிக்கக் கூடிய சமூக வலைதளங்களை தடைசெய்தல் வேண்டும் போன்றவற்றோடு இது தொடர்பில் அரசாங்கமும் கொள்கை வகுக்க வேண்டும். போன்றன பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**ஆய்வின் முக்கியத்துவம்**

சமூக ஊடகங்கள் மனிதர்களது வாழ்க்கை முறையை தீர்ானிக்கும் ஒரு கருவியாக மாற்றமடைந்துள்ளது. அதிலும் குறிப்பாக இளைஞர்களின் வாழ்க்கை முறையை தீர்ானிக்கும் ஒரு கருவியாக செயற்படுறது.

இவ்வாய்வானது இளைஞர்கள்சமூக ஊடகங்களை சரியான முறையில் பிரயோகிப்பதற்கான வழிமுறைகளையும், சமூக ஊடகங்கள் சமூக வாழ்க்கை முறை, சமூக விழுமியங்களை மோசமடைய வைத்துள்ளது என்பதையும் இளைஞர்கள் மத்தியில் பயன்படுத்த வேண்டிய நிலையான நெறிமுறைகளைக் கூறி அவர்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல்.

**இலக்கிய மீளாய்வுகள்**

இவ்வாய்வுக்காக பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில்,GulamShabir, yousf mahmood,GulamShafdar என்பவர்கள் சமூக ஊடகங்களின் இளைஞர்கள் மீதான தாக்கம் குறித்து பஹவல்பூர் நகரத்தை மையமாக வைத்து ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். ஆய்வுக்கான தரவுகளை வினாக்கொத்துக்களை வழங்கி பெற்றுக் கொண்டுள்ளார். இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்களானது தகவல்களை பிரச்சினைகளை பேசக் கூடிய களத்தை அமைத்துக் கொடுக்கிறது. மாறும் மனோநிலையைக் தொண்ட இளைஞர்களை மையமாக வைத்து ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.சமூக ஊடகங்களும் அதன் நன்மை, தீமைகள் மற்றும் விளைவுகளையும் கூறியுள்ளதோடு இளைஞர்கள் அதற்காக செலவு செய்யும் நேரம் பற்றியும் கூறியுள்ளார். அரசியல் விழிப்புணர்வை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தும் பிரதான மூலமாக சமூக ஊடகங்கள் திகழ்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

Qingya wang, wei chen, yu liang ஆகியோர் கல்லூரி மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் தாக்கம் எனும் ஆய்வினை jhonson & wales university மாணவர்களை மையமாகக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். சமூக ஊடகங்கள் தொடர்ந்தும் வளர்ந்து கொண்டு செல்வதாகவும் தொழிநுட்பம் மாணவர்கனது கல்வி வளர்ச்சிக்கு உதவுவதாகவும், மாணவர்கனது கல்வி வளர்ச்சியில் முக்கியமானதொரு பங்கினை வகிப்பதாகவும் கூறியள்ளார். கல்லூரி மாணவர்கள் சமூக வலைதளங்களை அதிகமாகப் பயன்படுத்துவதும், அதற்காக அதிக நேரம் செலவழிப்பதும் அவர்களது கல்வியைப் பாதிப்பதோடு, அவர்களது நடத்தையிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதாக கூறுகின்றார். மேலும் சமூக வலைதளங்கள் கவர்ச்சிபரமானதாக காணப்படுவதால் அது அதன் பயன்பாட்டாளர்களது மன அழுத்தத்தை இல்லாமல் செய்வதாகவும் கூறுகின்றார். இறுதியில் கல்வியியளாளர்கள் சமூக வலைதளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகைள வழங்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளார்.

Zahid akram, maqsood magmooh, Arshath Mahmood ஆகியோர் சமூக வலைதளங்களும் இளைஞர்கள் மீதான தாக்கங்களும் என்ற ஆய்வுக் கட்டுரையை பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத், ரவால்பிந்தி ஆகிய இரு நகரங்களிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்களை மையமாக வைத்து அளவியல் ரீதியான தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.இவ்வாய்வானது இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கங்களையும் சமூக ஊடகங்கள் இளைஞர்களின் வாழ்க்கையில் எத்தகைய செல்வாக்கினை செலுத்துகிறது என்பன பற்றியும் கூறுகிறார். மேலும் facebook ஆனது இளைஞர்களின் அதி விருப்பத்துக்குரிய சமூக ஊடகங்கமாக காணப்படுகின்றது. ஏன்பதோடு பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மத்தியில் சமூக ஊடகங்களின் பாவனை தொடர்பாக அதிக கரிசனை காட்ட வேண்டும் என்றும் தேவையற்ற கல்வியை பாதிக்கக் கூடிய ஊடகங்களை அரசாங்கம் கடை செய்ய வேண்டும் எனவும் பரிந்துரைகளை முன்கைக்கிறார்கள்.

**முடிவுரை**

இவ்வாய்வின் மூலம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட மாணவர்களின் விருப்பத்துக்குரிய சமூக ஊடகங்கள்,சமூக ஊடகங்களை நோக்கியதான நகர்வு, மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தாக்கங்கள் என்பன இனங்கானப்பட்டன. கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருட 263 மாணவர்களை மையமாகக் கொண்ட இவ்வாய்வுக்காக அளவியல் மற்றும் பண்புத்தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைப் பண்புத்தரவுகளாக நேர்காணல்(25), நேரடி அவதானம், குழுக்கலந்துரையாடல்கள்(04) மூலமும் அளவியல் தரவுகளாக வினாக்கொத்துக்கள்(30) ஐக் கொண்டமாதிரியைப் பயன்படுத்திதரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட கலை மற்றும் கலாச்சார பீட மூன்றாம் வருடமாணவர்களை பொறுத்தவரையில் இவர்கள் இலங்கை முழுதுமுள்ள அனைத்து பிரதேசங்களையும் மையப்படுத்தியோராகக் காணப்பட்டனர். இதன் மூலம் சமூக ஊடகங்கள் இலங்கை முழுதும் நாடெங்கிலும் பயன்படுத்தப்படுகின்றது என்பது தெளிவாகிறது. ஆய்வின் இறுதியில் 60 வீதத்துக்கும் மேற்பட்டோரால் விரும்பிஅதிகம் பயன்படுத்தக் கூடிய சமூக ஊடகங்கமாக whatsappஉம் அதனைத் தொடர்ந்து youtube, facebook,twitter, skypeதரப்படுத்தப்பட்டன. மேலும் சமூக ஊடகங்கள் wifiவசதி, கணனி கூடம், தொலைபேசி, வாசிகசாலை wifiவசதி போன்றன மூலம் அனுகப்படுவது கண்டறியப்பட்டதோடு அவற்றால் பல்கலைக்கழக மாணவர்களது நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவிணை அதிகரித்தல், உதவிப்பறிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்களும், உடல் உள ரீதியான பாதிப்பு, நேர வீண்விரயம், கல்வியில் பின்னடைவு, அதிக செலவு, சமூக கலாச்சார விழுமியங்களில் சீரழிவு போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணங்காணப்பட்டன. இவ்வாய்வின் முடிவில் சமூக ஊடகங்களின் பயன்பாடு காலத்தின் தேவையாக இருப்பதோடு,பல்கலைக்கழக

இளைஞர்களின் எதிர்காலத்தை முன்னிறுத்தி,இச்சமூக ஊடகங்கள் தொடர்பாக அதன் தாக்கம், விளைவு தொடர்பாக இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும். இதன் பாதிப்புக்ககளை உளவியலாளர்கள் சமூகத்திற்கு எத்திவைக்க வேண்டும். பல்கலைக்கழக நிர்வாகம் கல்வித்தேவைக்காக அமைத்துக் கொடுத்த வலைதள உதவிகளை கண்காணித்தல் போன்றன ஆய்வின் முடிவில் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**REFERENCES**


Ghulam Shabir1, Yousef Mahmood Yousef Hameed2, Ghulam Safdar3, Syed Muhammad Farouq Shah Gilani4, (*November 2014*), The Impact of Social Media on Youth: A Case Study of Bahawalpur City, 1,3-4 Department of Media Studies, The Islamia University of Bahawalpur, PAKISTAN, & 2 Faculty of Media, Middle East University, Amman, JORDAN. *Asian Journal of Social Sciences & Humanities Vol. 3(4)*

Akram Z, MahmudM, Mahmood A. (2015). Impact ofSocial Networking Sites (SNSs) On Youth. Applied SciencReports, 11 (1), 6-10. Retrieved from www.pscipub.com, (DOI:10.15192/PSCP.ASR.2015.11.1.610)

Leslie Haddon, Social Media and Youth, London School of Economics and Political Science, UK

Qingya Wang, Wei Chen, and Yu Liang,( November, 2011) The Effects of Social Media on College Students, Johnson &Wales University. Feinstein Graduate School, RSCH5500-Research & Analysis

Roger D. Wimmer and Joseph R. Dominick.Research in Media Effects.*Mass Media Research: An Introduction. 9th Edition.* (Revised October 2009) PP.1-31

Impact of media use on children and youth. Paediatr Child Health Vol 8 No 5 May/June 2003. PP.301-306. *Correspondence: Canadian Paediatric Society, 2204 Walkley Road, Suite 100, Ottawa, Ontario K1G 4G8. Telephone 613-526-9397. fax 613-526-3332, Web sites www.cps.ca*, www.caringforkids.cps.ca

Tessalonekka M. Loking,Erika Sybil D. del Castillo. 18 March 2012. Effects of Social Networking to Teenagers (Research Paper - B78)

S.J. Ball-Rokeach, M.L. DeFleur.A Dependency Model of Mass-Media Effects

DA Scheufele. (March 1999).Framing as a theory of media effects. DOI: 10.1111/j.1460-2466.1999.tb02784.xView/save citation

Douglas A. Gentile, David A. Walsh (March–April 2002,) A normative study of family media habits. Journal of Applied Developmental Psychology. Volume 23, Issue 2, *Pages 157–178*

Kenneth Newton. Mass Media Effects: Mobilization or Media Malaise? British Journal of Political Science, *Volume 29, Issue 4. September 1999, pp. 577-599. Published online: 01 September 1999*

F.H.A Shibly. r%f Clfq;fs; : tha;g;Gf;fSk; ru;r;irfSk;.http://srilankamuslims.lk/%E0%AE%9A%E0%AE%AE%E0%AF%82%E0%AE%95-%E0%AE%8A%E0%AE%9F%E0%AE%95%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%95/ (accessed on September 30, 2016)